Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 | கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? சங்.15:1 | ஜூன் 2022 No.6

இக்கட்டான காலத்தில் ஜெபித்தல்

Praying in a time of Crisis

வாழ்வு நமது கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருப்பதுபோல் இப்போது காணப்படுகிறது. அனேக விசுவாசிகள் பூமியில் கோரதாண்டவ மாடுவதால் கவலையும் விசாரமுமடைந் துள்ளனர். நமக்கு சர்வ வல்லமையுள்ள ஒரு பிதா இருக்கிறார். அவர் இந்த சரித்திரத்தின் அழிவு போன்ற தோற்றத் தால் ஆச்சரியப்படவேயில்லை.

கொரோனா வைரஸ் பயம், அழுத்தம், நிச்சயமின்மை, பதுக்குதல், பேராசை, பீதி, பகைமை போன்ற இன்னும் பலவற்றை ஏற்படுத்திவிட்டது. தேவன் இவைகளைத் தம்முடைய பிள்ளைகளில் விரும்புவதில்லை. இயேசு நம்மில் எதிர்பார்ப்பது தைரியம், சமாதானம், தயாள சிந்தை, இரக்கம் போன்றவைகளாகும். இக்கால கட்டத் தில் தேவ ஜனம் உலகத்தின் தன்மை களை வெளிப்படுத்த ஆரம்பித்தால் நமது சத்துருவாகிய சாத்தான் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுக்கொள்வான். கிறிஸ்துவைப் பின்பற்றும்படி தங்களை அர்ப்பணித்தவர்கள் உறுதியாக நின்று அவருடைய முகத்தைத் தேடுவார்கள். அதன் மூலம் தேவநாமம் அதிகமாக மகிமைப்படும்.

நாம் விசுவாசத்தில் வளர தீர்மானிக்க வேண்டும். அதற்காக அவரது ஜனமாகிய நம்மை எழுப்புதலடையச் செய்யவும் விழிப்படையச் செய்யவும் தேவனிடம் கேட்க வேண்டும். உலகம் முழுவதையும் அடக்கி வைத்திருக்கும் அறியப்படாத தீமைக்கு மத்தியில் நாம் ஜெபிப்பது எப்படி? அதை நமக்குத் தெரிவிக்கும்படி, வேத வாக்கியங்களைக் கவனிப்போம்.

1. மக்கள் மனந்திரும்புதலுடன் எழுப்புதலுக்காக தேவனிடம் திரும்பட்டும்:

"உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்திருக்கும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ? சங்.85:6. ஜாண் அவன்ட் என்பவர் "வல்லமை யுள்ள இந்த தேவன் நமது இதயங்களை ஆட்கொண்டிருப்பதாலும், அவர் நமது வாழ்வில் வாழிடமைத்திருப்பதாலும் அவரது கட்டுப்பாட்டில் நாம் இருக்கி றோம். அவரது திட்டம் நம்மை வலுப் படுத்துகிறது. அவரது திட்டத்தில் நாமும் ஒரு பங்குடையவர்கள்.

ஆனாலோ நீங்களும் நானும் அதிலிருந்து விலகிவிட்டோம். இந்த நிலையில் நம்மை நாமே கட்டுப்படுத்த முடியாதவர்களாகிவிடுகிறோம். மனந் திரும்ப அவர் அழைப்பதை நம்மால் உணரமுடியவில்லை. மனந்திரும்பும் வரை நாம் பிறரைக் குற்றம் காண்ப திலும், சண்டையிடுவதிலும் காலம் செலவு பண்ணுவோம். நான்தான் எனது பிரச்சனைக்கு காரணம் என்பதை உணர்ந்து மனம் நொறுங்கி ஜெபிக்க வேண்டும். கொரோனா நோய்க்காகக் கைகளைக் கழுவுவதைவிட தேவனிடம் திரும்பி அவர் நமது இருதயத்தை கழுவும்படி ஒப்புக்கொடுப்பது நல்லது.

ஜெபம் : பிதாவாகிய தேவனே, உலக மனைத்தையும் படைத்தவரே, மனந் திரும்புதலோடு எங்கள் இருதயத்தை உம்மிடம் கொண்டு வருகிறோம். எங்கள் சூழ்நிலைகளை நாங்களே கட்டுப்படுத்தவும், உம்மீது நம்பிக்கை வைக்காமலும் எங்களை நம்பி ஏமாந்து போனோம். எங்களை மன்னித்து, எங்கள் இருதயங்களை உம்மிடம் திருப்பும். உமது வல்லமையும் நற்குணமும் எங்களில் காணப்பட்டு உலகம் அதிசயிக் கட்டும். நாங்கள் உள்ளம் நொறுங்கியவர் களாக உமது பரிசுத்தத்தைப் பெற்று இயேசுவின் சீடராக எங்களை மாற்றும். போர்முனையில் முன்னால் நின்று சுறுசுறுப்புடன் செயல்பட உதவி செய்யும். உம்மிடம் தாழ்மையுடன் உமது இரக்கத்திற்காகக் கெஞ்சுகிறோம்.

2. தேவ ஜனம் பிசாசை எதிர்க்கவும், இயேசு கொடுக்கும் பரிபூரண வாழ்வைப் பெறவும் அதனால் பிறரும் தாக்கமடையவும் ஜெபியுங்கள் :

தேவ ஜனத்தை அழிக்கவும் இயேசுவில் விசுவாசம் வைக்க விரும்பு கிறவர்களைத் தடுக்கவும் ஒரு விரோதி இருக்கிறான். "திருடன் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன் றுக்கும் வரான்; நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரி பூரணப்படவும் வந்தேன்" யோவா.10:10 என்று இயேசு கூறினார். "ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்று யாக்.4:7-ல் யாக்கோபு ஆலோசனை தருகிறார். இயேசுக் கிறிஸ்துவின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிய வேண்டிய காலம் இது. பிறரை நேசிப்பதும், சேவை செய்வதும் பிதாவிடமிருந்துதான் நமக்குள் பாய்ந்து வருகிறது. அதனால் பரிபூரண வாழ்வைப் பெறுகிறோம்.

ஜெபம் : உம்மைப் பின்பற்றுகிறவர் களுக்குப் பரிபூரண வாழ்வை அளிக்க இவ்வுலகில் வந்த ஆண்டவராகிய இயேசுவே, இந்த ஆச்சரியமான பரிபூரண வாழ்வை நாங்கள் உடையவர் களாயிருப்பதால் நாங்கள் பிறரை இழுத்துக் கொள்ளத்தக்கதாக எங்களைப் பலப்படுத்தும். எபே.6:10-18 வசனங் களில் கூறப்பட்டிருக்கும் ஆவியின் பட்டயங்களை நாங்கள் தரித்துக் கொள்ளட்டும். தீயவனின் அக்கினி அஸ்திரங்களை அழித்துப்போட மிகப் பெரிய விசுவாசம் தாரும். எங்களால் இயன்ற அசாதாரண சேவை செய்யும் வாழ்வையும், மனதுருக்கத்தையும், தயாள சிந்தையையும் தாரும்.

3. தேவ ஜனம் பயத்தையும் கவலையையும் மேற் கொண்டு சமாதானத்தால் ஆளப்பட :

எதிரான சூழல்களில் பயப்படு வதும் திகைப்பதும் இயற்கைதான். ஆனால் தேவவசனம் சொல்லுவதென்ன? "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத் தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டு தலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத் துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

1. தயவுசெய்து, நீங்கள் பணம் அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் பத்திரிகை பதிவு எண்ணை எழுத மறவாதேயுங்கள்.
2. நீங்கள் வங்கி வழியாக எங்கள் கணக்குக்கு பணம் அனுப்பின உடனேயே எங்கள் வங்கி கணக்கில் வந்துவிடும்; ஆனால் அதை யார் அனுப்பினார்கள் என்று தெரியா விட்டால் உங்களுக்கு ரசீது அனுப்ப இயலாது. உங்கள் கணக்கில் வரவு வைக்கவும் முடியாது. எனவே வங்கி வழியாக பணம் அனுப்பினால் அன்றுதானே உடனே தகவல் தாருங்கள்.
3. உங்களுக்கு வரும் பத்திரிகையின் முகவரியில் உங்கள் தொலைபேசி எண் அச்சிடப்படாதிருந்தால் தயவு செய்து உடனே எங்களுக்குத் தெரிவி யுங்கள்.

மொபைல் : ***9543221008***
வாட்ஸ்அப் : ***9489740295***

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

நித்திய புயங்கள்

The everlasting arms

Charles H.Spurgeon

"அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" உபா.33:27. இந்த வேதபகுதியை, பொற்குவியலின் மத்தியில் சத்தியத்தின் ஐசுவரியமிக்க பொக்கிஷத்தை அடக்கிய சிறிய வாசகம் என்று சொல்லலாம். தேவ ஜனங்கள் ஆவிக்குரிய தனத்தை சுதந்தரமாகக் கொண்டவர்கள். அந்த சம்பத்து கேட்கிறவர்களுக்கு மட்டுமல்ல, அனைத்து விசுவாசி களுக்கும் உரியது. நீங்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை விசுவாசித்தால் இந்த விலையேறப்பெற்ற வாக்கை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டு அதன்படி வாழ்ந்து, உங்கள் ஆத்துமா அடையும் புத்துணர்ச்சியில் மகிழலாம்.

உபா.38:26-29 வரையுள்ள நான்கு வசனங்களில் தேவன் தமது பிள்ளைகளுக்கு எவ்வளவு அருகாமை யிலிருக்கிறார் என்பதை காண்கிறோம். அவர் நமக்கு மேலாகவும் நம்மைச் சூழ்ந்தும் தமது தெய்வீக வலிமை யினால் நம்மைப் பாதுகாக்கிறார். "யெஷுரனுடைய தேவனைப் போல் ஒருவரும் இல்லை; அவர் உனக்குச் சகாயமாய் வானங்களின்மேலும், தமது மாட்சிமையோடு ஆகாய மண்டலங்களின் மேலும் ஏறிவருகிறார்" உபா. 33:26. விசுவாசத்தின் மூலம் தெய்வீகக் குதிரைப்படையின் காலடி ஓசையினை நாம் தலைக்கு மேலாகக் கேட்கலாம். கர்த்தரை நம்புகிற நாம் எப்போதும் பாதுகாவலுடனிருக்கிறோம். தேவதூதர்கள் மேலிருந்து கீழாக நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நமக்குத் தேவை ஏற்பட்டதும் நமக்காகத் தங்கள் பெலனைப் பயன்படுத்திப் போராடு வார்கள். இதே பகுதி மூலமாக தேவன் நமக்குக் கீழே கொடுக்கும் பாதுகாவலையும் அறியலாம். அவர் பரலோகத் தின் உன்னதமான இடத்தில் இருப்பது போலவே, அவரது நித்திய புயங்கள் நமக்கடியிலிருந்து நம்மைத் தாங்குகின்றன. அடுத்த வாக்கியம், தேவன் நமக்கு முன்னாக இருப்பதைக் காண்பிக்கிறது. "..... அவர் உனக்கு முன்னின்று சத்துருக் களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார்" வச.27. இந்த அதிகாரத்தின் பிற்பகுதி அவர் நம்மைச் சூழவைத்திருக்கும் பிரசன்னத்தால் நம்மைப் பாதுகாப்பதைத் தெரிவிக்கிறது. அவரது மகிமையின் பிரசன்னமாகிய அவரது அன்பு நம்மைச் சூழ்ந்து கொள்கிறது. இவ்வாறு அவர் மேலும், கீழும் சுற்றிலும் இருக்கிறார். அவர் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை. ஏனெனில் அவரில் நாம் வாழ்கிறோம், அசைகிறோம், அவரது அருகாமையில் மகிழ்ந்து களிகூருகிறோம்.

தேவன் நமக்கு அருகிலிருக்கிறார்

தேவனுடைய நித்திய புயங்கள் என்பது தேவனே நமக்கு அருகிலிருப்பதைக் காண்பிக்கிறது. அவரை நம்புகிற வர்களுக்கு அவர் உத்தரவாதி. அவர் நம்மோடிருப்பது நமக்கு மகிழ்ச்சியும் ஆறுதலுமாயிருக்கிறது. தேவ பிரசன்னத்தை விசுவாசிப்பது நமது விசுவாசத்தை இன்னும் பலப்படுத்து கிறது. பரலோகத்தையும் பூலோகத்தையும் சிருஷ்டித்த அவர் தம்மைவிட்டு விலகாதவர்களைக் கைவிட மாட்டார். நீங்கள் அவரை நேசித்து விசுவாசித்தால் அவர் ஒருவரையும் ஏமாற்று வதில்லை என்று கண்டுகொள்ளலாம். புறஜாதிகளின் தெய்வங்கள் ஒன்றுக்கும் உதவாது. அவை வெறும் விக்கிர கங்கள் மட்டுமே. நமது தேவன் ஜெபத்தைக் கேட்கிறவர். மக்களின் கூப்பிடுதலுக்குப் பதிலளிக்கிறவர். நீங்கள் வேண்டு மானால் சோதித்துப் பார்க்கலாம். அவரை நம்புகிறவர்கள் பாக்கியவான்கள்.

தேவன் நமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்

தேவனுடைய மாற்றப்படாத திட்டங்கள் நிறை வேறிக் கொண்டிருக்கின்றன. தேவ கரங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிருபையின் நோக்கங்களை அவர் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். அவரது நித்திய புயங்கள் நோக்கங்களை மாற்றுவதில்லை. தேவ பிள்ளையே, மிகுந்த ஆழத்திலும் நீ பார்க்க முடியாத இடத்திலும் தெய்வீக வல்லமையின் கரம் உனக்காக செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது. அவரது அன்பு நித்தியமானது. உலகில் என்ன மாறுதல் ஏற்பட்டாலும் தமது பிள்ளைகளை அவர் கடைசி மட்டும் ஆசீர்வதிப்பார். எனவே இதனை இதயத்திற் கொண்டு ஆறுதலடைவோம்! எது எனக்கு நடந்தாலும் அதில் தேவனுடைய நோக்கமுண்டு. அவர் கிரியை நடப்பிக் கிறார் என்று உங்களுக்குள்ளே பேசிக் கொள்ளுங்கள்.

தேவனிடம் முடிவில்லாத பொறுமை உண்டு. அவருடைய நீடிய பொறுமை ஏற்றவேளைக்காக காத்திருக் கிறது. அவரது நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். அவை உங்கள் பாரத்தை சுமந்து பொறுமையுடனிருக்கின்றன. உங்களுக்காக மறைவாகவும் அக்கரங்கள் செயல்படுகின்றன. தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்போம்.

தூய ஆவியானவர்தான் உங்களை இந்நிலைக்குக் கொண்டு வரவேண்டும். குமாரன் மூலமாக தேவனை விசுவாசித்திருக்கிற நீங்கள் உங்கள் பாவங்களை இரட்ச கராகிய இயேசுவின்மீது வைத்துவிட்டு அதைக்குறித்து எந்தக் கவலையுமில்லாமலிருக்கலாம். அவரது வாக்குகள் ஒன்றும் தரையில் விழுவதில்லை. "பொய் சொல்லப் தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுப்புத்திரனும் அல்ல, அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ?" எண்.23:19. தேவன் உங்களைச் சுமப்பதாக வாக்களித்திருக்கிறார். எனவே நம்பிக்கையுடனிருங்கள்.

"அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்" என்பது விசுவாசிகளுக்கு விலையேறப்பெற்ற வாக்குத்தத்த மாயிருக்கிறது.

வியாதி மற்றும் பலவீன நேரங்களில்

வியாதி பெலவீன நேரங்களில் சோர்ந்து மூர்ச்சித்துப் போகிறோம். ஆனால் மூழ்குவது போன்ற நிலையிலும் அவரது

(8-ம் பக்க தொடர்ச்சி)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

குள்ளாகக் காத்துக்கொள்ளும் பிலி.4:6-7. "என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன், உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" யோ.16:33

ஜெபம் : சமாதானப் பிரபுவே, நீர் காற்றையும் அமைதிப்படுத்தினீர். எப்போதெல்லாம் மக்கள் அமைதியிழந்து வந்தார்களோ அப்போதெல்லாம் அவர்களை அமைதிப்படுத்தினீர். கொரோனா வைரஸ் திரளான மக்களின் சமாதானத்தைப் பறித்துவிட்டது. அவர்கள் மத்தியில் அமைதியைக் கொண்டு வர எங்களை பயன்படுத்தும். சமாதானத்தையும் பயமின்மையையும் நாங்கள் பரவச் செய்யட்டும். எங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் நீர் காத்துக் கொள்வதால் எங்கள் எண்ணங்களும் உணர்வுகளும் உம்மையே நோக்கி திரும்பட்டும். நிச்சயமின்றி வாழும் மக்களுக்கு நாங்கள் தைரியம் கொடுக்க எங்களை பயன்படுத்தும். உம்மை நாங்கள் பிரதிபலிப்பதால் உம் நாமம் மகிமைப்பட வேண்டும்.

4. இயேசுவின் வல்லமையை வெளிப்படுத்தக்கூடிய உருக்கம், உருவாக்குதல், ஐக்கியம் ஆகியவற்றை காண்பிக்க தேவன் அளிக்கும் வாய்ப்புகளை பயன்படுத்த, சபை முன்னேற ஜெபிக்க வேண்டும் :

நிச்சயமின்மை நிறைந்த இந்தக் காலக்கட்டத்தில் மக்கள் அரசாங்கத்திடமும், மருத்துவ சமுதாயத்திடமும் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது, சபை தனது கதவுகளைப் பூட்டி வைரஸ் நுழையாதபடி பார்த்துக் கொண்டிருக்கிறது. மலைமேல் பட்டணம் போல் ஒளிவீச வேண்டிய சபை, ஜீவனுள்ள சுவிசேஷத்திற்கும் மக்களின் மறுரூபத்திற்கும் நம்பிக்கைக்கும் அடையாளமாயிருக்கிறதா? சபை அசாதாரணமான நமது தேவனுக்கு அசாதாரணமான காரியங்களைச் செய்ய வேண்டும்.

ஜெபம் : மனவுருக்கமுள்ள கிறிஸ்துவே, சபையானது மக்கள் நம்பிக்கையடையவும், உற்சாகப்படுத்தப்படவும், ஐக்கியத்தில் வளரவும், உருவாக்குவதில் முன்னேறவும் சுவிசேஷத்தைப் பரப்பவும் ஏதுவாயிருக்கச் செய்யும். அசாதாரணமான செயல்களைச் செய்ய பெலனும் தைரியமும் தாரும். பல்வேறு நம்பிக்கைகள் கொண்ட தேசத்தில் சாதாரண மக்களோடும் அதிகாரிகளோடும் ஐக்கியமாக வாழ உதவிசெய்யும். இவைகளிலெல்லாம் இயேசுக்கிறிஸ்துவின் வல்லமையும் பெலனும் ஆதரவாயிருக்கவும் பிதாவின் மகிமையும் துதியும் விளங்கவும் செய்யும்.

யோவான் 17:21-26 வரையுள்ள வசனங்களில் இயேசு ஏறெடுத்த ஜெபத்தைச் செய்யுங்கள்.

5. இந்த வைரஸால் எளிதில் தாக்கப்படக்கூடியமுதியோர், எதிர்ப்புத் தன்மையற்றோர் போன்றவர்களுக்காக வேண்டுதல் செய்வோம்:

நீங்கள் இந்தப் பட்டியலில் இருக்கலாம். சங்கீதம் 23-ஐ ஜெபமாக ஏறெடுங்கள். இத்தகைய சூழ்நிலையிலிருப்போருக்காக இணைந்து ஜெபிப்போம். ஒருவேளை இந்நோயில் அகப்பட்டிருந்தால் அவர்களது சுகத்திற்காக ஜெபிப்போம். ஒரு ஆசீர்வாதமான ஜெபம் 3 யோவான் 2-ம் வசனத்தில் அடங்கியிருக்கிறது.

ஜெபம் : ஆண்டவராகிய தேவனே நீர் இரக்கம் நிறைந்தவர். சங்.145-ல் கூறப்படுவதுபோல உருக்கம் அன்பு ஆகிய வற்றால் நிறைந்தவர். எங்கள் மத்தியிலிருந்து வியாதியை நீக்குவீராக. "அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்" யாத்.23:25. எங்கள் எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் மேலாக நீர் எங்களை நேசிக்கிறீர். முதியோரையும் நோய் எதிர்ப்பு தன்மையற்றவர்களையும், பல்வேறு உடல் நலக்குறைவுள்ளவர்களையும் உமது கரத்தில் படைக்கிறோம். தெய்வீகத் தலையிடுதலாலே அவர்கள் பாதுகாக்கப்படவும், சுகமுள்ளவர்கள் சுக வீனரைப் பராமரிக்கும் தன்மையுடையவர்களாயிருக்கவும் கிருபை செய்யும்.

6. வேலை இழந்தவர்கள், கல்வியை இழந்தவர்கள், தனிமைப்படுத்தப்பட்டவர்கள், உதவியற்றவர்கள் போன்றவர்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படாமல் காத்துக் கொள்ளப்பட உதவி செய்வோம்:

அன்பானவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டதால் அனேகர் தனிமையாக்கப்பட்ட உணர்வுடன் காணப்படுகிறார்கள். அவர்களை எப்படி உற்சாகப்படுத்துவது என்று சிந்தித்துப் பாருங்கள். வேலை இழந்தவர்கள் ஏதேனும் முறையில் சிறிய வருமானத்தைப் பெற்றுக் கொள்ள உதவ முடியுமா என முயற்சித்துப் பாருங்கள். பள்ளிக்குச் செல்ல முடியாத குழந்தைகள் ஏதேனும் ஒரு முறையில் கல்வி பயில உதவி செய்யுங்கள். தேவன் உங்களை இச்சூழலில் ஒரு பயனுள்ள பாத்திரமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

ஜெபம் : பிதாவே நீர் எங்களுக்காக கவலைப்படுகிறவரும், எங்கள் பாரங்களை சுமக்கிறவருமாயிருக்கிறபடியால் உம்மைத் துதிக்கிறோம் (1 பேது.5:7). நீர் எங்களுக்காக வைத்திருக்கும் திட்டங்களை நீரே அறிவீர். அவை எங்களுக்கு முன்னேற்றம் தருபவைகளேயன்றி தீங்கு தருபவையல்ல. அவை நம்பிக்கையின் எதிர்காலத்தைத் தரக்கூடியவை (எரேமி.29:11). நீர் இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கி காயங்களைக் கட்டுகிறவர் (சங்.147:3). அவை சரீரபிரகாரமாகவோ ஆவிக்குரியபடியோ அல்லது உணர்ச்சிவசமாகவோ ஏற்பட்டிருக்கலாம். சங்.34:17-18 வசனங்களின்படி நீதிமானை விடுவிக்கிறவராகவும் நொருங்குண்ட இருதயமுள்ளவர்களுக்கு சமீபமாயிருந்து நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிற வருமாயிருக்கிறீர். வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்கள் உம்மண்டை வரும்போது இளைப்பாறுதல் தருவீர் என்று அறிவோம் (மத்.11:28). தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்குச் வீடு வாசல்களை ஏற்படுத்திக் கொடுக்கிறீர் சங்.18:6. இவைகளுக்காக நாங்கள் நன்றி செலுத்துகிறோம். இன்றும் அப்படிச் செய்யும்படி விண்ணப்பிக்கிறோம். இன்றைய சூழ் நிலையில் தமது உதவியை எதிர்பார்க்கும் அனைவருக்கும் உமது உதவி கிடைப்பதாக. பலங்கொண்டு திடமனதாயிருக்கக் கட்டளையிட்டிருக்கிறீரே (யோசு.1:9). நீர் எங்களோடிருப்பதால் தாங்கள் பயப்படாமலும் கலங்காமலுமிருக்கச் செய்யும்.

இந்தக் கொடிய வைரஸ் தாக்குதலின் நாட்களில் சத்துரு தோற்கடிக்கப்பட்டு, சபைகளும், தனி மனிதனும், உலகமும் ஒரு பெரிய மாற்றத்தைக் காண்பதாக. ஆமென்.

நொறுக்குதல்களும் ஆசீர்வாதங்களும்

Bruises and blessings

Albert Moore

அல்பெர்ட் மூர் காங்கோவில் உள்ள சுவிசேஷ ஊழியர்களோடு ஊழியம் செய்த ஒரு முந்தைய மிஷனெறி.

"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" சங்.91:11.

அன்று சனிக்கிழமை இத்தகைய ஒரு பிரயாணத்திற்கு தாமதமாகிக் கொண்டிருந்தது. ஆயினும் இப்போது போகாவிட்டால் திங்கட்கிழமைதான் போக முடியும். அந்தக் காட்டிற்குள்ளே பிரயாணம் செய்ய ஒரு மாதத்திற்குரிய பொருட்களைக் கட்டிவைத்தோம். எங்களோடு பிரயாணம் பண்ணவிருந்த ஆப்ரிக்கர்கள் தங்கள் பொருட்களைக் கூடைகளோடும் குழந்தைகளோடும் ஆயத்தமாயிருந்தனர். தடையில்லாதிருந்தால் மாலைமயங்குமுன் நெடுஞ்சாலையை அடைத்துவிடலாமென்று தீர்மானித்துப் புறப்பட்டோம். இபாம்பி வேதகலாசாலை மாணவர்கள் எட்டு வாரங்கள் படிக்கவும், பின்பு ஒருமாதம் வெவ்வேறு மாவட்டங்களில் சுவிசேஷ ஊழியத்துடன் சாட்சி பகரவும் நல்ல அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும் எதிர்பார்ப்புடனிருந்தனர். ஏற்கெனவே சுற்றிலுமுள்ள பகுதிகள் சந்திக்கப்பட்டு வந்தது. தூரமான இடங்கள் இப்போது பயனடைய வேண்டும். அதற்கு மாணவர்கள் சரக்குவண்டிகளில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். துவக்க இடத்திலிருந்து பல்வேறு பகுதிகளுக்குப் பிரிந்துசென்று விட்டு மாத இறுதியில் ஒன்றுகூட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் காரியங்களை நாங்கள் அதிகமாக சிந்திக்க சிந்திக்க எங்கள் பிரயாணத்தை கர்த்தர் அனுமதிக்கிறார் என்ற உணர்வு ஏற்பட்டது. ஆனாலும்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

சத்துரு இந்த முயற்சிக்கு எதிராயிருந்தான். மிகுந்த ஜெபத்தோடு கடினங்களை ஒவ்வொன்றாகத் தாண்டினோம். எதிர்பாராத ஒரு பிரயாணத்தால் வண்டியை தென்பகுதியிலுள்ளலுபுட்டு என்ற இடத்திற்கு அனுப்ப வேண்டிய தாயிற்று. அது நாங்கள் புறப்பட வேண்டுமென்றிருந்த இரவுக்கு முன் மிகவும் தாமதமாக வந்தது. வண்டியில் சிறியதொரு பழுதும் ஏற்பட்டிருந்தது. எனவே ஒரு காலை முழுவதும் அதைச் சரிப்படுத்த செலவு பண்ண வேண்டிய தாயிற்று.

எங்கள் பாதையில்

பாபரி என்ற இனமக்கள் வசித்த பாமிலி என்ற இடம் தொண்ணூறு மைல்களுக்கு அப்பாலிருந்தது. அங்கு மிஷனெறிகள் புதிய தளம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தனர். அவர்களுக்குச் செங்கல் தயாரிக்கும் எந்திரம் ஒன்று தேவைப்பட்டது. அது பாரமாயிருந்தாலும் வண்டியில் ஏற்றினோம். இன்னும் தேவையான பொருட்களடங்கிய பெட்டிகளும் முகாமுக்கான தள வாடங்களும் வைக்கப்பட்டன. மீதியான இடத்தில் 28 காங்கோ மக்களும், மாணவர்களும் அவர்களுடைய மனைவி குழந்தைகளும் உட்கார்ந்தனர் அல்லது நின்றனர். இன்னும் சில மூட்டைகளும், தூங்கு வதற்கான பாய்களும் ஆங்காங்கே நுழைத்து வைக்கப்பட்டன. எவருமே இடநெருக்கடியைக் குறித்துக் கவலைப் படவில்லை. ஏனெனில் அவர்கள் சொகுசான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டவர்களல்ல. ஒரு பெரிய நீர்புகாத கித்தான் துணி (Taurpaulin) வண்டியின் மேற்கூரையாகப் பாதுகாப்பிற்காகக் கட்டப்பட்டது. அனைவரும் சந்தோஷமாக ஏறிய பின் பின்பக்கப் பகுதியும் அடைக்கப் பட்டது. நானும் என் மனைவியும் இரு பது மாத கைக்குழந்தையுடன் ஏறவும் பிரயாணம் ஜெபத்துடன் ஆரம்பமானது.

இபாம்பி பகுதியினைக் கடந்து ரஸ்தா தங்கச் சுரங்கம் வழியாகச் சென்றது. இந்த ரஸ்தா இரண்டாம் தரமானது. சுரங்கத்தோடு மட்டும் தொடர்புடையது. பல பகுதிகள் பயன்படுத்தப்படாமல், பழுதுபார்க்க வேண்டிய நிலையிலிருந்தன. குண்டு குழிகள் ஓட்டுனர் வெகுஜாக்கிரதையாக ஓட்டும்படி அமைந்திருந்தன. வண்டி பக்கவாட்டில் சாய்வதும் சுமைகள் அங்குமிங்குமாக அசைவதுமாயிருந்தன. மழையும் தூற ஆரம்பித்தது. பாபேறு மலைபகுதியை அடைந்தபோது மழை அதிகமானது. அந்த மலையின் பக்க வாட்டு காட்டுப்பகுதியில் அதிகதூரம் பார்க்கக்கூடாமல் அடர்த்தியாயிருந்தது. மழையும் எங்கள் பார்வையைத் தடுத்தது. அந்த மலைப்பாதையில் மிக மெதுவாகச் செல்வதே பாதுகாவல். எனவே பகல் வெளிச்சத்தில் சென்று சேரவேண்டிய இடத்தை அடைய முயற்சித்தோம். உற்சாகம் குன்ற வில்லை. பாபரி இன மக்களுக்கு ஒரு மாதகாலம் ஊழியம் செய்யும் ஆவலுட னிருந்தோம். மக்கள் கர்த்தரைத் துதித்துப் பாடிக் கொண்டிருந்தனர்.

செங்குத்தான பாறைகள் நிறைந்த ஏற்றங்களையும் சில அடி ஆழமான பள்ளங்களையும் கடந்தோம். சிலர் ஜெபக்கூடுகை நடத்திக் கொண்டிருந்தனர். மலையின் உச்சிப் பகுதியை அடைந்த நாங்கள் மெதுவாக வளைந்தும் திரும்பியும் கீழே இறங்க ஆரம்பித்தோம். ரஸ்தா மிக ஒடுக்கமாகவும் பிற வாகனங்கள் கடந்து செல்லும்போது மலைப்பகுதியை உராய்ந்து செல்வது போலவுமிருந்தது.

போய்ச்சேர இன்னும் சிறிது நேரம்தானிருந்தது. எஸ்தாவில் ஒரு வளைவு காணப்பட்டது. பின் சக்கரம் ரஸ்தாவின் மிக ஓரமாக வந்துவிட்டது. வண்டியைக் கட்டுப்படுத்த எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. வாகனம் தலைகீழாகக் கவிழ்ந்தது. நாங்களும் பல குட்டிக்கரணங்கள் போட்டோம். கர்த்தரை நோக்கி அபயமிட்டேன். குழந்தையை இறுக்கமாகப் பற்றிக் கொண்டேன். இன்னும் எத்தனை முறை குட்டிக் கரணங்கள் போட்ட பின்பு வண்டி விழுந்து நொறுங்குமோ என்ற நிலைதான். திடீரென ரஸ்தாவிலிருந்து ஐம்பது அடிதாழ்வில் வண்டி நின்று விட்டது. ஒரு பெரியமரத்தின் அடிப் பகுதி வண்டியைத் தடுத்து, புல்லும் சகதியுமான இடத்தில் ஒரு நீரோடை யினருகில் நிற்கச் செய்தது.

Mungo Iko! மங்கோ இக்கோ!

அதிர்ச்சியிலிருந்து நான் மீண்ட போது "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி தமது தூதர் களுக்குக் கட்டளையிடுவார்" என்ற வசனம் என் காதுகளில் தொனித்தது. கதவைத் திறக்க முயற்சித்தேன். அது இறுக்கமாக அடைபட்டிருந்தது. பின்புறத்தில் உட்கார்ந்திருந்த ஆண்கள் எங்களிடம் ஓடி வந்து விசாரித்தனர். அவர்களுக்காக நாங்கள் வந்திருந்தோம் என்ற கரிசனை அவர்களிடம் காணப் பட்டது. மிகவும் சிரமத்தோடு கதவு திறக்கப்பட்டது. அனைவரும் உயி ரோடிருக்கிறார்களா என்று கவனித் தேன். இத்தனை தளவாடங்களுக் கிடையில் பல குட்டிக்கரணங்கள் போட்டும் அத்தனை மக்களுடைய உயிரும் பாதுகாக்கப்பட்டிருந்தது. நாங்கள் அனைவரும் பத்திரமாயிருக் கிறோம் என்று அவர்கள் ஒலி எழுப்பினர். தேவனிருக்கிறார் என்பதை அவர்கள் மொழியில் 'மங்கோ இக்கோ' என்று ஆர்ப்பரித்தனர். ஒரே ஒருவர் மட்டும் வண்டியை விட்டு வெளியே குதித்த படியால் அதிகமான காயங்களை அடைந்திருந்தார். சிலருக்கு சிறிய காயங்களிலிருந்தது. சிலர் அதிர்ச்சி யடைந்திருந்தனர். மற்றவர்கள் அனை வரும் நன்றாயிருந்தனர். கூரையில் கட்டப்பட்டிருந்த கித்தான் துணி எவரும் வெளியே விழாதபடி மூடி பாதுகாத்துக் கொண்டது.

எல்லாம் நடந்து முடிந்து விட்டது. இரவு நெருங்கிக் கொண்டிருந் தது. ஆனால் வண்டி மலையோரத்தில் கிடந்தது. அதை ரஸ்தாவுக்கு கொண்டு வருவது எப்படி? ஏதேனும் மனித உதவி கிடைக்குமோ எனத் தேடினேன். சுரங்க மையம் ஒன்றில் ஒன்றிரண்டு பெல்ஜியன் காவலர்கள் இருப்பதைக் கண்டேன். இந்த விபத்தைக் குறித்து கூறியபோது அவர்கள் என்ன உதவி செய்யலாம் என்று பார்க்க ஒரு சிறிய காருடன் வந்தனர். என் மனைவி உட்கார்ந்திருந்த இட.த்தை அவர்கள் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். தேவன் ஒருவரே நாங்கள் கொல்லப்படா மல் காத்தார் என்பது தெளிவு. எங்கள் பொருட்களையும் அத்தனை மக்களை யும் உயிரோடே பார்த்தபோது 'இது மெய் யாகவே ஒரு அதிசயம்' என்று கூறினர்.

அந்த இரக்க குணம் படைத்த பெல்ஜியர்கள் அவர்களது கூடாரத்திற்கு எங்களை அழைத்துச் சென்றனர். நாங்கள் பாம்பிலி சென்று சேரப் பயண வசதியும் செய்து தந்தனர். அனைவரும் ஒரே வார்டில் செல்ல முடிந்தது. விபத்துக் குள்ளான வண்டியை ரஸ்தாவில் தூக்கி நிறுத்துவதற்கான ஒழுங்குகளையும் செய்தனர். அதற்காக எந்த காசும் அவர்கள் எங்களிடம் வாங்கவில்லை.

பாபரி மக்கள் மத்தியில் ஒருமாதகாலம் வெற்றியாக ஊழியம் நடைபெற தேவன் உதவி செய்தார். தேவன் தங்களை அதிசயமாகப் பாது காத்ததை அனைவரும் சாட்சியாக அறிவித்தனர். பல கிராமங்கள் ஆண்ட வருக்குச் சொந்தமாயின.

உங்கள் அயலாருக்காக ஜெபித்தல்

Praying for your neighbours

Kim Butts

ஜெபம் சுவிசேஷப் பணியில் மிகுந்த வல்லமையுடையதும், எல்லா ராலும் செய்யக்கூடியதுமாகும். ஜெப மின்றி ஒருவரும் கிறிஸ்துவண்டை வர முடியாது. நாம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள நமது பெற்றோரோ அல்லது வேறு ஒருவரோ ஜெபித்திருக்கலாம். அது யார் என்பதை பரலோகம் சென்றபிறகுதான் அறிய முடியும். ஆனால் யோவா.14:6-ன் படி இயேசுக் கிறிஸ்துவின் மூலமாக அல்லாமல் ஒருவரும் பிதாவினிடத்தில் வர முடியாது. மேலும் அவரை அனுப் பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளா விட்டால் அவன் இயேசுக் கிறிஸ்துவிடம் வரமுடியாது யோவா.6:44. தமது ஜனங்களின் ஜெபத்தின் மூலமாக நம்மை அவரிடம் இழுத்துக்கொள்ளுகிறார்.

தேவன் உங்களுக்கு கொடுத்த பணி அவர் உங்கள் இருதயத்தில் யாருக்காக ஜெபிக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கொடுத்திருக்கிறாரோ அவர்களுக்காக ஜெபிப்பதுதான். உங்கள் ஜெபத்தால் அவர்கள் நித்திய இருளி

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

லிருந்து வெளிச்சத்துக்கு நேராகக் கொண்டு வரப்படுகிறார்கள். ஒவ்வொரு வரும் பிறருக்காகக் கரிசனை கொள்ளவும் அவர்களிடம் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளவும் ஆண்டவர் எதிர்பார்க் கிறார். ஏனெனில் 1 தீமோ.2:4-ன் படி "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடை யவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே அவரது ஜனங்களாகிய நாம் இருளிலிருக்கிறவர்களுக்காக ஜெபிப்பது அவசியம்.

இப்பணிக்கு முதற்களமாயிருப் பது நமது அயலார். மிக அருகாமையில் இன்னும் இயேசுவை இரட்சகராக அறியாத மக்கள் வாழுகிறார்கள். அது நாட்டுப்புறமாகவோ, ஒரு சிறிய பகுதி யாகவோ, ஒரு கட்டிடமாகவோ, ஒரு கல்லூரி வளாகமாகவோ இருக்கலாம். எப்படியானாலும் நீங்கள் அவர்களுக் காக வல்லமையோடும் ஊக்கத்தோடும் ஜெபிக்கலாம்.

வேதவசனத்தை ஜெபமாக்க வேண்டும்

வேதவசனம் ஜீவனையும் ஒளியையும் நமக்குத் தந்ததுபோலவே அவர்கள் வாழ்விலும் தரும் என்ற நினைவுடன் எப்போதும் ஜெபிக்க வேண்டும். "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" சங்.119:105. அவ்வாறு நமது அயலாருக்காக ஜெபிக்கும் போது அது அவர்களுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருவதோடு, தேவ வசனத்தை நாம் செயல்படுத்த வேண்டும் என்ற அவரது ஆவலைப் பூர்த்தி செய்யவும் கூடியதாயிருக்கிறது. எடுத்துக்காட்டாக "தேவனே எங்கள் அயலாரை ஆசீர்வதியும்" என்று ஜெபிப் பதைவிட எண்.6:24-26 வசனங்களைக் கூறி ஜெபிப்பது எத்தனை மேலானது.

இவ்வாறு தேவ வசனத்தை பிறருடைய வாழ்விலும் சூழ்நிலை களிலும் கூறி ஜெபிப்பதால் தேவன் ஆச்சரியமான காரியங்களைச் செய்யக் கூடும் "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து, பேதைகளை உணர்வுள்ளவர்களாக்கும்" சங்.119:130. முன்பு புரிந்து கொள்ளமுடியாமலிருந்த வற்றையும் இப்போது எளிதில் உணர்ந்து கொள்ள முடியும். நாம் ஜெபிக்கும் போது மக்களுடைய இருதயங்கள் திறக்கப்பட்டு கர்த்தரிடமிருந்து உணர்வைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

கிறிஸ்துவின் வெளிச்சம் : மத்.5:14-16 வசனங்கள் உங்களில் கிறிஸ்துவின் வெளிச்சம் இருப்பதை விளக்குகின்றன. உங்கள் அயலார் இயேசுவின் ஒளியை உங்களில் காணவேண்டும். உங்களி லிருக்கும் வேறுபாட்டை அவர்கள் காணும்போது, அதனை விசாரித்து அவர்களும் அதனைப் பெற்றுக்கொள்ள விரும்புவார்கள். நாம் தேவனுடைய திட்டங்களும் நோக்கங்களும் நம் மூல மாக வெளிப்பட தேவனுக்கு இட மளிக்க வேண்டும்.

உங்கள் அயலாருக்காக ஜெபிக் கும் போது அவர்களைக் கவனிப்பதற் கான வாய்ப்புகளை தேவன் தரும்படி ஜெபிக்க வேண்டும். ஒரு மூதாட்டி யாரேனும் தன் நிலத்தில் வேலை செய்யும்படி எதிர்பார்க்கலாம். சமீபத் தில் குழந்தை பெற்ற ஒரு தாய் கடையில் பொருட்கள் வாங்க ஒருவருடைய உதவியினை நாடலாம். அல்லது ஒரு புதுமணத் தம்பதிகள் உங்கள் வீட்டில் விருந்துண்ண அழைக்கப்பட விரும்ப லாம். நீங்கள் ஜெபித்தால் தேவன் இப்படிப்பட்ட வாய்ப்புகளைத் தருவார். அதன் மூலம் அவர்களோடு ஆண்டவரது சுவிசேஷத்தை அறிவிக்க வாய்ப்பினைப் பெறலாம்.

ஜீவ ஒளி

"நான் உலகத்திற்கு ஒளியாயிருக் கிறேன்; என்னைப் பின்பற்றுகிறவன் இருளில் நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்" யோவா.8:12. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அயலா ருக்காக ஜெபிக்கும்போது அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு இயேசுவைக் குறித்த சத்தியங்களை அவர்கள் இருதயங்கள் அறிய ஏதுவாகும். ஏனெ னில் நாம் அவர்களுக்காக ஆழமான கரிசனை கொள்கிறோம். எனவே ஆச்சரியமான காரியங்கள் நிகழும்.

ஐந்து ஆசீர்வாதங்கள்

1. சரீரத்துக்காக, சுகம், பாதுகாவல் போன்றவை களுக்காக.
2. அவர்களது உழைப்பு, பணி, பள்ளி, பொருளா தாரம் போன்றவற்றிற்காக
3. அவர்களின் உள்ளத்தின் உணர்ச்சி பூர்வமான தேவைகளுக்காக.
4. குடும்பம் நண்பர்கள் போன்ற உறவுகளுக்காக
5. ஆண்டவராகிய இயேசுவோடுள்ள நல்ல உறவுக்காக

மேற்கூறிய ஆசீர்வாதங்களை நமது அயலாருக்கு நாம் ஜெபத்தின் மூலம் பெற்றுத்தரலாம்.

சரீரத்துக்காக ஜெபிப்பது எப்படி?: "கர்த்தாவே, அவர்கள் சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்யட்டும், ஏனெ னில் கர்த்தாவே நீர் ஒருவரே அவர்களைச் சுகமாய்த் தங்கப் பண்ணுகிறீர்" சங்.4:8.

உழைப்புக்காக : "எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் அயலார் மேல் இருப்பதாக. அவர்கள் கைகளின் கிரியையை அவர்களிடத்தில் உறுதிப் படுத்தும்" சங்.90:17.

உணர்ச்சிக்காக : "பிதாவே, என் அயலார் சமாதான தாபரங்களிலும், நிலையான வாசஸ்தலங்களிலும் அமைதியாய் தங்கும் இடங்களிலும் குடியிருக்கப் பண்ணும்" (ஏசா.32:18). "உம்மிடமிருந்து வரும் சந்தோஷமே அவர்களுடைய பெலன் என்று அவர்கள் அறிந்து கொள்ளச் செய்யும்" நெகே.8:10.

சமூக நிலையில் : "ஆண்டவரே, எனது அயலார் ஒருவரோடொருவர் சமாதான முள்ளவர்களாக வாழவும், சகோதர சினேகமும் மனவுருக்கமுள்ளவர்களு மாய் வாழ உதவிசெய்யும்" 1 பேதுரு.3:8.

ஆவிக்குரிய நிலையில் : "கிருபையுள்ள தேவனே எனது அயலார் நீரே வழியும் சத்தியமும் ஜீவனும் என்று கண்டு கொள்ளட்டும். இயேசுக் கிறிஸ்துவே அல்லாமல் வேறு எவ்விதத்திலும் உம்மிடம் வரமுடியாது என அறிந்து கொள்ளட்டும்" (யோவா.11:6).

வல்லமையான விளைவுகள்

நீங்கள் இப்படி ஜெபிப்பதற் குரிய பலன் நிச்சயம் உண்டு. தேவன் உங்கள் இருதயத்தில் அவர்களுக்காக அதிக அளவிலான அன்பை ஊற்றுவார். உங்கள் கரிசனையான செயல்களால் இயேசுவின் அன்பைக் காண்பியுங்கள். பின்பு ஆவியானவரின் நடத்துதலின்படி சுவிசேஷம் அறிவியுங்கள். உங்கள் வாழ்வில் இயேசு எவைகளைச் செய்திருக் கிறார் என்பதை அவர்கள் அறியட்டும். நீங்கள் ஜெபத்தால் அவர்களை ஆயத்தம் பண்ணியிருப்பதாலும் உங்கள் அன்பின் செயல்களால் அவர்கள் மீது கரிசனை காட்டி யிருப்பதாலும் அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்க இப்போது ஆயத்தமாயிருப்பார்கள்.

பிள்ளைகளே உங்கள் அயலா ருக்காக ஜெபிக்க ஆரம்பியுங்கள். நீங்கள் ஒரு குடும்பமாக இணைந்து ஜெபத்தில் வளரவும் இயேசுவைப் போலாகவும் அது ஏதுவாகும்.

கர்த்தரையே எதிர்பார்த்திருத்தல்

Looking for the Lord Himself

A.F.C. Woods

"நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்து வினுடைய மகிமையின் பிரசன்னமாகு தலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டி ருக்கும் படி நமக்குப் போதிக்கிறது" தீத்து.2:13. நமது இரட்சகராகிய இயேசுவின் மகிமையின் பிரசன்னம் ஒரு தத்துவமாக மாத்திரம் இருக்கக்கூடாது. அவருடைய வருகைக்காக ஆவலோடு எதிர்பார்த்திருக்க வேண்டும். நமக்காக தமது ஜீவனையே கொடுத்தவரும் நமக்காக மகிமையான எதிர்காலத்தைத் திட்டமிட்டிருக்கிறவருமான அவரை சந்திக்க மகிழ்ச்சியோடு எதிர்பார்த்திருக்க வேண்டும்.

அவருக்காக வாழவேண்டும்

"ஆகையால் பிரியமானவர்களே இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர் களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருங்கள்" 2 பேது.3:14. நமது வாழ்வு மிகவும் வித்தியாசமானதாயிருக்க வேண்டும். ஆண்டவர் நமக்காகத் திரும்ப வருகிறார். அந்த நாளுக்காகவே நாம் செயல்பட வேண்டும்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

'இன்று ஆண்டவர் வருவாரானால்' என்ற எண்ணம் எப்போதும் நம்மிடமிருக்குமானால் நமது வாழ்க்கை எவ்வளவு வித்தியாசமாயிருக்கும்! "அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்" *1 யோவா.3:3.*

அவருக்காக உழைக்கவேண்டும்

தாலந்துகளின் உவமையில் ஆண்டவராகிய இயேசு தாலந்தை வாங்கியவர்களிடம் "நான் திரும்பி வருமளவும் இதைக் கொண்டு வியாபாரம் பண்ணுங்கள்" லூக்.*19:13* என்றார். ஆண்டவர் நமக்குக் கொடுத் திருக்கும் கடமைகளை உத்தமமாகச் செய்வோம்.

நாம் செய்யும் பணியினை அன்புடன் செய்ய வேண்டும். தெசலோனிக்கேயரின் அன்பின் உழைப்பை நினைத்துப் பவுல் தனது ஜெபத்தில் அனுதினமும் துதிக்கிறதை *1 தெச.1:3*-ல் வாசிக்கிறோம். *வெளி.2:2*-ல் "என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்" என்று ஆண்டவர் கூறியிருக்கிறார். கடமை என்று உழைக்காமல் அன்பினால் உழைப்போமாக. எந்த பணி கொடுக்கப்பட்டாலும் சந்தோஷமாகவும் பொறுமையாகவும் அன்புடன் நிறைவேற்றுவோம். அப்படிச் செய்தால் நிறைவான பலனைப் பெறுவோம்.

வயல் நிலங்கள் அறுவடைக்கு ஆயத்தமாயிருப்பதால் நாம் உழைக்க வேண்டும். அதோடு 'கர்த்தராகிய இயேசுவே வாரும்' என்ற அவரது வருகையின் நினைப்போடு உழைப்பைப் பெருக்க வேண்டும். ஆண்டவரை அறியாதவர்கள் அவரை அறிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அவர் வருகைக் குரிய அநேக அடையாளங்கள் தோன்றிவிட்டன. நாம் செய்ய வேண்டிய அனேக காரியங்களும் இருக்கின்றன. கலப்பையின் மீது கைவைத்த நாம் திரும்பிப் பார்க்கக் கூடாது. எல்லா பாரங்களையும் உதறுவோம். எல்லாத் தடைகளையும் தாண்டுவோம். ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் இரட்சிக்கப்படவில்லை. அவர்கள் கேள்விப்படாமல் எப்படி விசுவாசிக்கக்கூடும்? பிரசங்கிப்பவர் இல்லாவிட்டால் எப்படி விசுவாசிப்பார்கள்? பாவிகளின் இரட்சிப்பைக் குறித்து அவர்கள் அறிய வேண்டுமே. இயேசுக் கிறிஸ்து பாவிகளுக்காக மரித்தார். அவர்கள் மனந்திரும்பி பாவ மன்னிப்பைப் பெற வேண்டும் என்பது அவர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

"ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் அசையாதவர்களாயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக *1 கொரி.15:58.*

அவரைச் சார்ந்து கொள்ள வேண்டும்

ஆண்டவராகிய இயேசு அன்பினாலே நமக்காக ஒரு அற்புதமான வாசஸ்தலத்தை ஆயத்தம் பண்ணுவதாகவும் மறுபடியும் வந்து அழைத்து சென்று நித்தியமாக அவரோடு சந்தோஷமாக வாழச் செய்வதாகவும் கூறியிருப்பதால் அவரைச் சார்ந்து நாம் வாழலாம். நமது நித்திய வாழ்வுக்காகக் கரிசனையுள்ள அவர் நமது தற்கால தேவைகளை பூர்த்தி செய்யாமலிருப்பாரா? நமது எதிர்காலத்தைக் குறித்து விசுவாசிக்கிற நாம் தற்காலத்தைக் குறித்து ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும்? நமது சூழ்நிலைகளெல்லாம் அவருக்குத் தெரியும். எல்லாவற்றையும் மேற்கொள்ள அவர் உதவி செய்வார். அவர் வருகைக்காக ஆயத்தப்படுகிற நாம் இவைகளைக் குறித்துக் கவலைப்படுவது ஏன்? அவர் நேசிக்கிறவர், நமக்காகக் கவலைப்படுகிறவர். அனுதினமும் அவரது நடத்துதல் நம்மை ஆசீர்வதிக்கிறது.

அவரை நேசிப்போம்

'அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூருகிறீர்கள்' *1 பேது.1:8.* அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு தூய ஆவியானவர் அற்புதமான காரியங்களை வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது இரட்சிக்கும் அன்பு எவ்வளவு விலையேறப்பெற்றது என்று அறிந்து கொண்ட நாம் அவரை எவ்வளவாய் நேசிக்க வேண்டும்!

ஜெபத்தில் உறுதி

Confidence in prayer

Harold Vaughan

தேவனிடத்தில் நாம் தைரியமாகக் கிட்டிச் சேரலாம் என்று வேதபுத்தகம் போதிக்கிறது. "ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்" எபி.*4:16.* 'தைரியமாக' என்ற பதம் திறந்தமுகமாக, ஒளிவு மறைவின்றி, திட நம்பிக்கையுடன் என்பவைகளைக் குறிக்கிறது. அதாவது நமது முழு நம்பிக்கையும் தேவனிடத்தில் சேர வேண்டும்.

தேவனை கிட்டிச்சேர முதல் முதலாக தேவையானது உறுதியான உடன்பாடு. உறுதியோடும் நம்பிக்கையோடும் அவரை உயர்த்தி நாம் ஜெபிப்பதை தேவன் விரும்புகிறார். "அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது" எபி.*10:19.* மனிதனைத் தேவனிடமிருந்து பிரிக்கும் திரைச் சீலையை இயேசுவின் மரணம் கிழித்து விட்டது. தேவனிடம் செல்லுவதற்கான பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளது. முழுமையான நம்பிக்கையுடன் தேவ பிள்ளைகள் அவரிடம் வரும்படி தேவன் அழைக்கிறார்.

தண்ணீரில் நடக்க வேண்டுமானால் முதலாவது படகைவிட்டு நாம் இறங்க வேண்டும். மிகப் பயங்கரமான புயல் அடித்தபோது சீஷர்கள் படகில் இருந்தனர். அலைகள் படகின்மேல் மோதிய வேளையில் இயேசு கடலின் மேல் நடந்து அவர்களுக்கெதிரே வந்தார். சீஷர்கள் அவரைக் கண்டு பயமடைந்த போது அவர் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி பயப்படாமல் தைரியமாயிருக்கும்படி கூறினார். பேதுரு ஒருவன் மட்டும் அவரிடம், "ஆண்டவரே! நீரேயானால், நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும்" மத்.*14:28* என்று கேட்டுக் கொண்டான். ஆண்டவரும் அதன்படி அவனை வா என்று அழைக்க அவன் படகை விட்டிறங்கி இயேசுவிடம் செல்ல ஜலத்தின்மேல் நடந்தான். மனிதனால் கூடாத ஒரு வேண்டுதலை கேட்கும் அளவிற்குத் தைரியமும், துணிவும் பேதுருவினிடத்தில் இருந்தன. திட நம்பிக்கையோடு முதல் அடியை எடுத்து வைக்கும் மனஉறுதி அவனிடமிருந்தது, அது தேவையாகவுமிருந்தது.

இத்தகைய ஜெபம் தேவனுக்கு மிகவும் பிரியமானது. நாம் நமது முழு நம்பிக்கையையும் அவர்மீது வைத்து ஜெபிக்க வேண்டும். அப்போது காற்றும், புயலும், அலைகளும் நம் சிந்தையில் வருவதேயில்லை. நம்பிக்கையின் ஜெபம் நம்மைச் சுற்றிலும் பாதுகாவலாகக் காணப்படும். அது எதிரான சூழல்களைத் தாண்டி நோக்குகிறது. ஆகவே கிருபாசனத்தைக் கிட்டிச்சேருகிற நம்மிடம் தைரியம், நிச்சயம், உறுதி ஆகியவை வேண்டும். "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்கு தைரியமும் திடநம்பிக்கையும் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" எபேசி.*3:12.*

அவிசுவாசம் நல்லதல்ல. அது தேவனுடைய வல்லமையைக் கட்டுப்படுத்துகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் அவிசுவாசத்தால் தேவனைத் துக்கப்படுத்தவும், அவருக்கு எரிச்சலுண்டாக்கவும், அவரை சோதிக்கவும், அவரது வல்லமையைக் குறைவாக மதிப்பிடவும் செய்தனர். "அவர்கள் திரும்பி, தேவனை பரீட்சை பார்த்து, இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்" சங்.*78:41.* "அவருடைய வார்த்தையில் அவரைப் பற்றிக் கொள்வதுதான் விசுவாசம்" என்று R.A. ட்டாறி கூறியிருக்கிறார். தேவனுடைய வசனமே சான்று. அது பொய்யற்றது. அதை விசுவாசிப்பது நன்று. தீத்து *1:3*-ல் பொய்புரையாத தேவன் என்று அவரைக் குறித்துப் படிக்கிறோம். தேவனை நாம் முற்றிலும் விசுவாசிக்கலாம் என்பதற்கு ஆதாரமான வசனங்கள் வேதபுத்தகத்தில் ஏராளம். அவரது பிள்ளைகள் அவரை நம்புவதால் அவர் சந்தோஷமடைகிறார். தைரியமாக நாம் அவரிடம் செல்ல வேண்டும் என்று நம்மைப் பார்த்து அழைக்கிறார். அவரது

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

இரக்கத்தையும் கிருபையையும் அவரிட மிருந்து நாம் பெற்றுக்கொள்ள நமக்கு அவரிடம் நம்பிக்கை வேண்டும். தேவனுடைய உத்தமத்தின் மேலுள்ள துணிச்சலான விசுவாசம் அவரது வல்லமையை நாம் பெற்றுக்கொள்ள நம்மை நடத்தும்.

சுற்றிலும் கண்களை சுழல விட்டால் தைரியத்தை இழந்துவிட நேரிடும். மக்களை நோக்கிப் பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும். நம்மையே பார்ப் போமானாலும் மனந்தளர்ந்து போவோம். ஆனால் கிறிஸ்துவை நோக்கி பார்ப்போமானால் அதற்குரிய பலனைப் பெறுவோம். "அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துப் பிரகாசமடைந்தார்கள்; அவர்கள் முகங்கள் வெட்கப்பட வில்லை" சங்.34:5. எனவே தைரியமாக அவரைக் கிட்டிச்சேருவோம்.

தேவனுடைய உத்தமம்

The faithfulness of God

Authur W.Pink

"கர்த்தாவே உமது கிருபை வானங்களில் விளங்குகிறது. உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தம் எட்டுகிறது" சங்.36:5. எத்தனை அழகிய வசனம்! தேவனுடைய மாறாத சத்தியம் புரிந்துகொள்ள முடியாதது. தேவனைக் குறித்தவைகளெல்லாம் ஒப்பிடப்படக் கூடாதவை. அவர் மறதியுடையவரு மல்ல, மாறுகிறவருமல்ல. அவர் தனது வார்த்தையில் தடுமாறுவதில்லை. அவர் வாக்கு மாறாதவர். அவர் கொடுத்த உறுதி மொழி அல்லது வாக்கு அல்லது தீர்க்கத் தரிசனம் எல்லாவற்றிலும் அவர் உத்தமரா யிருந்திருக்கிறார். ஏனெனில் அவர் தேவன். "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல, மனம்மாற அவர் ஒரு மனுப்புத்திரனும் அல்ல; அவர் சொல்லி யும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரோ?" எண்ணா.23:19. எனவே விசுவாசி "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே; அவருடைய இரக்கங் களுக்கு முடிவில்லை, அவைகள் காலை தோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது" என்பான் புலம்பல் 3:22-23.

தேவன் சத்தியமானவர். அவரது வாக்குத்தத்த வசனங்கள் நிச்சய மானவை. அவர் தமது ஜனங்களோடுள்ள உறவில் உத்தமமானவர். அவர்மேல் சார்ந்து வாழ்வது பாதுகாவலானது. இந்நாள்வரைக்கும் அவரை உண்மை யாய் நம்பினவர்கள் வெட்கப்பட்ட தில்லை. உத்தமம் அவரது தெய்வீகப் பண்பில் மிக முக்கியமானது என்பதை நாம் தெரிந்து கொள்ளவே இந்த விலையேறப்பட்ட சத்தியம் பல்வேறு வேதவாக்கியங்களில் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அவரில் நாம் நம்பிக்கை வைக்க இது அடிப்படையாயிருக்கிறது. தேவனுடைய உத்தமம் என்பது ஒரு தெய்வீக சத்தியம் என்பதை ஏற்றுக் கொள்வது ஒன்று; ஆனால் அதன் அடிப்படையில் செயல்படுவது வேறு. தேவன் நமக்கு ஏராளமான மகத்துவ மானதும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்களை அளித்திருந்தாலும் அவை நிறைவேறுவதைக் குறித்த நம்பிக்கை நம்மிலுண்டா? அவர் சொன் னவைகளையெல்லாம் அவர் நமக்குச் செய்ய நாம் எதிர்பார்க்கிறோமா? எபி.10:23-ல் கூறப்பட்ட "வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக் கிறாரே" என்பது மிகவும் உறுதியானது என்ற நம்பிக்கை நம்மிலிருக்கிறதா?

சோதனை வேளைகளில்

அனைவருடைய வாழ்விலும் ஏன் கிறிஸ்தவர்களுடைய வாழ்விலும் கூட சில வேளைகளில் தேவன் உத்தமர் என்பதை ஒத்துக்கொள்ள கடினமாகி விடுகிறது. நமது விசுவாசம் சோதிக்கப் பட்டு கண்கள் கண்ணீரால் மங்கி தேவ அன்பின் உயரிய செயல்களைக் கண்டு கொள்ளக் கூடாமல் ஆகிவிடுகின்றன. நமது காதுகள் உலக ஓசைகளால் கவனச் சிதறலடைந்து சாத்தானுடைய நாஸ்திக இரகசியக் குரலுக்கு இழுக்கப்பட்டு விடுகின்றன. எனவே தேவனுடைய இனிய தாழ்ந்த குரலின் உச்சரிப்புகளை நாம் கேட்க முடிவதில்லை. நமது ஆசை யான திட்டங்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம். நாம் நம்பியிருந்த நண்பர் கள் ஏமாற்றலாம், நல்ல கிறிஸ்தவ சகோ தரனோ சகோதரியோ நம்மைக் காட்டிக் கொடுத்திருக்கலாம். தேவனுக்கு உத்தம மாயிருக்க விரும்பின நாம் தடுமாறும் நிலை ஏற்படுகிறது. ஒரு கார்மேகம் தேவனை மறைத்துவிடுகிறது. நாம் இக்கட்டான சூழ்நிலைக்கு வருகிறோம். அவரது கிருபையின் வாக்குத்தத்தங் களை மாம்சம் ஒத்துக்கொள்ள முடிய வில்லை. அருமையான பரலோக பிரயாணியே, ஏசாயா 50:10-ன் மூலம் அவரது கிருபையைத் தேடு. "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு, தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக்கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி தன் தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன்".

தேவனுடைய உத்தமத்தை சந்தேகிக்கும் சோதனை ஏற்படும் போது, 'அப்பாலே போ சாத்தானே' என்று சாத் தானை அதட்டுவோம். இன்றும் அவரது அன்பில், இரகசிய செயலில் தடுமாற்ற மெனில் கர்த்தருக்குக் காத்திருங்கள். அப்போது அவரது வேளையில் அவர் வழிசெய்வார். "நான் செய்கிறது இன்ன தென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய்" யோவா.13:7 என்று சொல்லுவார். எனவே தேவன் உங் களைக் கைவிடவும் ஏமாற்றவும் இல்லை என அறிந்து கொள்வீர்கள். "ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத் திருப்பார். உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்; கர்த்தர் நீதிசெய்கிற தேவன்; அவருக்குக் காத்திருக்கிற அனை வரும் பாக்கியவான்கள்" ஏசா.30:18.

தேவன் நமக்காக இடைபடுவார் என்ற நம்பிக்கையின் சத்தியம் நம்மைக் கவலைப்படாமல் தடுக்கும். நமது சூழ் நிலைகளைக் கவலையோடும், துக்கத் தோடும், நாளை என்ன நடைபெறுமோ என்ற எண்ணத்தோடும் பார்க்கும்போது தேவனுடைய உத்தமம் நமது கண் களுக்குத் தெளிவாயிருப்பதில்லை. **சிறுவயதிலிருந்தே கடந்த ஆண்டுகளி லெல்லாம் கரிசனையோடு வழிநடத்தின ஆண்டவர் வயோதிப காலத்தில் கவனிக்க மாட்டாரா?** கடந்த காலங்களில் நமது ஜெபங்களைக் கேட்டு மறுக்காமல் தேவைகளை சந்தித்தவர் இந்நாட்களின் அவசர தேவைகளையும் சந்திப்பது நிச்சயம். ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார்; ஏழாவதிலும் பொல் லாப்பு உம்மைத் தொடாது யோபு.5:19 என்பதை மறக்க வேண்டாம்.

இந்த சிறந்த சத்தியத்தை அறிந்தால் முறுமுறுப்பு நம்மைவிட்டு அகன்று போகும். நமக்கு எது மிகவும் நல்லது என்று தேவன் அறிவார். இந்த சத்தியம் நம்மில் செயல்படுவதால் நமது சிறிய குற்றச்சாட்டுகள் அமைதிப் படுத்தப்படும். சோதனைகளிலும் சீர்திருத்தலிலும் நாம் அவரைப் பற்றிய நல்ல எண்ணத்துடன் அவரது ஞானம் நீதி ஆகியவற்றை நிலைநிறுத்தி அவருடைய அன்பை உணர்ந்து கொள்வதால் தேவன் அதிகமாக கனப்படுத்தப்படுவார்.

இந்த ஆசீர்வாதமான சத்தி யத்தை புரிந்து கொள்ளுவதால் தேவனில் நமது நம்பிக்கையை பெருகச் செய்யும். தேவனுடைய சித்தத்தின்படி பாடனு பவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர் களாய் தங்கள் ஆத்துமாக்களை உண்மை யுள்ள சிருஷ்டி கர்த்தராகிய அவருக்கு ஒப்புக்கொடுக்கக்கடவர்கள் 1 பேது.4:19. இவ்வாறு நம்பிக்கையுடன் நம்மை தேவகரத்தில் அர்ப்பணித்து அவரது அன்பு உத்தமம் ஆகியவற்றை முற்றிலும் உணர்ந்துகொள்ளும்போது அவர் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தார் மாற்.7:37 என்பதை அறிந்து திருப்தி யடைவோம்.

எழுப்புதலுக்காக ஜெபித்திடு!
எழுப்புதலுக்காக பிரசங்கித்திடு!

கன்னியாகுமரி மாவட்டத்தில்
எழுப்புதலுக்காக இதய கதறல்
(7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **09-07-2022** சனிக்கிழமை
காலை 10 மணி - மாலை 5 வரை

இடம் : **Bethel Fellowship Church**
ராணித்தோட்டம், நாகர்கோவில்

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு: **வருகையின் தூதன்**
மொபைல் : 9543221008

சிந்தனைக்கு

மனந்திரும்பும் வரை நாம் பிறரைக் குற்றம் காண்பதிலும், சண்டையிடுவதிலும் காலம் செலவு பண்ணுவோம்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

நித்திய புயங்கள் நம்மைத் தாங்கு கின்றன. எழும்ப முயற்சிக்கிறோம் எழும்ப முடியவில்லை. ஏதோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு செயல்படலாமென் றால் அதுவும் கூடவில்லை. களைப்பும் வேதனையும் மேலிடுகின்றன. இத்த கைய நேரங்களிலும் கூட அவரது நித்திய புயங்கள் ஆதாரமாக நம்மைத் தாங்கு கின்றன. எத்தனை சந்தோஷமான அனுபவம்! அவர் உத்தமர், பரிதாபம் நிறைந்தவர், பெலவீன நேரங்களில் இதை மனதில் வைத்து செயல்படுவோம்.

தொல்லை மிகும் நேரங்களில்

வேதனை தொல்லை போன்ற வற்றால் தொய்ந்து போகும் நேரங்களில் இந்த வசனம் எத்தனை இனிமையாகக் காதுகளில் தொனிக்கிறது! இரட்டிப் பான பெலன் தேவைப்படுகிறது என்ற நிலையிலிருக்கலாம்; அல்லது "இதற்கு மேல் தாங்கமுடியாது, மறுபடியும் மறுபடியும் இச்சோதனை வருகிறதே. நான் என்ன செய்வது? நான் கீழே தள்ளப்பட்டுவிடுவேனோ? மக்கள் என் தலைக்கு மேலாக ஏறிக் கடந்து செல்கி றார்கள். நான் தெருவிலுள்ள சகதி போல ஆகிவிட்டேன்" என்று எண்ணும் வேளை யிலும் அவரது நித்திய புயங்கள் நம்மைத் தாங்கிக் கொண்டே இருக்கும்.

தேவபிள்ளைகளிடம் அவர்களது அனுபவங்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் 'தேவன் உண்மையுள்ளவர்' என்று உறுதிபடக் கூறுவார்கள். ஏனெனில் அவர்கள் பாடுகள், எதிர்ப்பு கள் மத்தியிலும் மகிழ்ச்சியும் பூரிப்புமா யிருக்க நித்திய புயங்கள் அவர்களைத் தாங்கியது. மிக இனிமையான பாடல்கள், சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் பாடப் பட்டன. அப்புயங்களால் சந்தோஷமற்ற நிலைகளிலும் அவர்கள் பாடமுடிந்தது. மிக அந்தகாரமான இரவுகளில் நைட்டிங் கேல் பறவை மிக இனிமையாகப் பாடும். அது போன்றது தான் அவர்களது அனுப வம். அவர்களது சந்தோஷம் மேலோட்ட மானது அல்ல. துக்கங்கள் எப்புறத்தி லிருந்து வந்தாலும் அவர்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அதிகமான சந்தோஷம் பொங்கி வரும். அவரது நித்திய புயங்கள் மேல் ஆதாரமாகச் சார்ந்து கொள்ளு கிறார்கள்.

வயோதிபத்தின் நாட்களில்

நமது வாழ்க்கையில் நாம் வயோதிபத்தால் தளரும்போது கூட ஆண்டவர் நம்மோடு உண்டு. சேவையில் நாம் உயரமாக ஏறும்போதும் அவர் நம்மோடிருக்கிறார். வயோதிபம் என்னும் குன்றில் இறங்கிவரும்போது முடிவு சமீபம் என அறிவீர்கள். ஆனாலும் உயரமான அனுபவத்திற்கு நீங்கள் கொண்டு செல்லப்படுவீர்கள். தமது நித்திய புயங்களால் அவரோடு நித்திய காலம் வாழ நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கலாம்.

ஆவிக்குரிய வளர்ச்சியின் காலங்களில்

நமது உள்ளான உற்சாகம் ஆண்டவருக்காக இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டுமென்று நம்மைத் தூண்டும் போது அப்படிச் செய்ய அவருடைய நித்திய புயங்கள் நம்மைத் தாங்குகின்றன. பரிசுத்தத்தில் வளர விரும்புகிறீர்களா? தைரியமாய் முன்னேறுங்கள். உங்கள் இறக்கைகளின் தூவல்கள் வளர்ந்து பறப்பதற்கு துணை செய்யும். அவருடைய கிருபை பெரியது. அதற்கு உங்களை ஒப்படைத்து விடுங்கள். பலவீனத்தோடும் நடுக்கத் தோடும் இருக்கவேண்டாம். தாவீதைப் போல அவரது புயங்கள் உங்களைத் தாங்கும். உங்களைப் பலப்படுத்தி தூதனாகவே மாற்றுவார்.

மரண வேளையில்

உங்கள் கால்களுக்கடியில் எல்லாம் உருகிவடிந்து போகும் ஒரு நாள் வரும். உலக சுகங்கள் நின்றுபோகும். நண்பர்களின் உதவி அற்றுப்போகும். அவர்கள் உங்கள் வியர்வையை துடைக் கலாம், அல்லது உதடுகளை ஒரு துளி நீரால் நனைக்கலாம். ஆனால் நீங்கள் போகவிருக்கும் பிரயாணத்தில் அவர்கள் துணையாக வரமுடியாது. இருதயமும் மாம்சமும் பெலனற்றுப் போய்விடும் போது தாங்குவது நித்திய புயங்கள்தான். மாம்சம் செயலற்றுப் போகும்போது ஆவி எழும்புகிறது. மரிக்கும் பக்தர்களின் அடியில் நித்திய புயங்கள் வைக்கப் படுகின்றன. எனவே அவர்கள் மரணத்துக்குப் பயப்படுவதில்லை. கிறிஸ்தவனுக்கு சாவு ஆதாயம் பிலி.1:21. ஒரு அருமையான தேவ மனிதன் மரித்தபோது அவரது சடலம் கல்லறையில் இறக்கப்பட்டது. அப்போது ஒரு ஊழியர், "ஆண்டவரே எங்கள் அருமை யான நண்பரை இந்தத் தாழ்வான கல்லறையில் வைக்கிறோம். அவர் இதைவிடக் கீழே செல்ல முடியாது. ஏனெனில் கீழிருந்து உமது நித்திய புயங்கள் அவரைத் தாங்குகின்றன. ஏற்ற வேளையில் கர்த்தருடைய சாயலில் நித்திய புயங்களால் எழுப்பப்போகிறீர்" என்று ஜெபித்தார். இது அனைத்து பக்தர்களுக்கும் உரியது. அவரது நித்திய புயங்கள் இறுதிமட்டும் நம்மைத் தாங்கு வதாக.

++++++

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **இம்மானுவேல் பெந்தெகொஸ்தே சபை**
கடத்தூர் P.O., தர்மபுரி - 635 303
செல் : 86678 65524

நாள் : ***11.06.2022,*** 2-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்** மொபைல் : *9543221008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

இயேசு கற்பித்த **ஜெபம்** நமது ஜெபங்களுக்கு ஒரு மாதிரியாயிருக்கிறது. அது நாம் ஜெபிப்பதற்கான ஒரு வழி காட்டி. அது ஒரு கட்டடத்திற்கான வரைபடம் போன்றது. ஒரு சரீரத்தின் எலும்புக்கூட்டிற்கு இணையானது.

நமது ஆவி, மாம்சத்திலிருந்து **சிலுவையின்** வல்லமையால் விடுவிக்கப்படும் போது, நாம் கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவோம்.

தண்ணீரில் **நடக்க** வேண்டுமானால் முதலாவது படகைவிட்டு நாம் **இறங்க** வேண்டும்.

ஜெபம் என்பது பைன் மரத்தின் வெட்டப்பட்ட பகுதியிலிருந்து பிசின் கசிந்து வடிந்து வருவதற்காகக் கட்டப்பட்ட பாத்திரம் என்று ஒப்பிட்டுக் கூறலாம்.

தேவனைக் குறித்தவைகளெல்லாம் ஒப்பிடப்படக் கூடாதவை. அவர் மறதியுடைய வருமல்ல, மாறுகிறவருமல்ல. அவர் தனது **வார்த்தையில்** தடுமாறுவதில்லை. அவர் வாக்கு மாறாதவர்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason